# பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தைக் கோவை

## பாகம் I
## பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தைக் கோவையின் நோக்கம்

1. (அ). (இதனகத்துப்பின்னர் "நடத்தைக் கோவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தைக் கோவையின் நோக்கமானது பாராளுமன்றத்துக்கு, அவர்களின் தேர்தல்தொகுதி மற்றும் பொதுமக்களுக்கான தமது பொறுப்புடைமைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு அவர்கள் தமது தத்துவங்களையும் பணிகளையும் மற்றும் கடமைகளையும் தங்களால் பிரயோகித்தல் புரிதல் மற்றும் நிறைவேற்றுதல் என்பவற்றுக்கு உதவுவதற்காதல் வேண்டும்.

(ஆ). பாராளுமன்றமானது (அ) ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்தை எய்தும்பொருட்டு,-

(i) பொதுமக்களின் பிரதிநிதிகள் என்ற ரீதியில் பாராளுமன்ற உறுப்பினர்கள் (இதனகத்துப்பின்னர் "உறுப்பினர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஒவ்வொருவரிடமும் எதிர்பார்க்கப்படும் நடத்தை தொடர்பான நியமங்கள் மற்றும் கோட்பாடுகளை தாபித்தல் வேண்டும்;

(ii) உறுப்பினர் ஒவ்வொருவரும் பின்பற்றக்கூடியதான (அ) என்னும் உட்பந்தியின்கீழ் தாபிக்கப்பட்ட நியமங்கள் மற்றும் கோட்பாடுகளை பலப்படுத்துகின்றதான நடத்தை விதிகளை குறித்துரைத்தல் வேண்டும்;

(iii) உறுப்பினர்களிடம் எதிர்பார்க்கப்படும் தராதரம் தொடர்பாக பொதுமக்களின் நம்பிக்கை தன்மையை உறுதிப்படுத்துவதற்காகவும் அத்தகைய விதிகளை போற்றிக்காப்பதற்கும் பாராளுமன்றத்தின் அர்ப்பணிப்பை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

## பாகம் II
## நடத்தைக் கோவையின் நோக்கெல்லை

2. (அ) நடத்தைக் கோவையானது தலைமைதாங்கும் உறுப்பினர்கள், பிரதம அமைச்சர், சபை முதல்வர், எதிர்கட்சித் தலைவர், அரசாங்கம் மற்றும் எதிர்கட்சியின் முதற்கோலாசான்கள் ஆகியோர் உட்பட ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் அவர்களின் பொதுவாழ்வின் அனைத்து விடயங்களிலும் ஏற்புடையதாதல் வேண்டும். எவ்வாறாயினும் அத்தகைய ஆட்களின் தனிப்பட்ட மற்றும் சொந்த வாழ்க்கை இந்நடத்தைக்கோவையினால் ஒழுங்குபடுத்தப்படுகின்றது என பொருள்படுதலாகாது.

(ஆ) இந்நடத்தைக் கோவையில் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புடைமைகள் ஆனவை சபையின் நடவடிக்கை முறையையும் வேறேதேனும் விதியையும் மற்றும் தலைமை தாங்கும் உறுப்பினர்களின் தீர்ப்புகளையும் சேர்ப்பதற்கும் ஒழுங்குபடுத்துவதற்குமாகவே உள்ளன.

(இ) நடத்தைக் கோவையானது 1978 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டம் மற்றும் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) நடத்தைக் கோவையானது எந்த எழுத்திலான சட்டத்தினால் உறுப்பினர்களின் நடத்தையானது ஏதேனும் முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்துள்ளதோ அந்த எழுத்திலான சட்டத்தினை மதிப்புக்குறைத்தல் ஆகாது.

## பாகம் III
## உறுப்பினர்களின் கடமைகள்

3. உறுப்பினர் ஒவ்வொருவரும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பினை போற்றிப்பாதுகாப்பதற்கும் அரசின் ஒருமைப்பாட்டினை போற்றிக்காப்பதற்கும் 1ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் (இதனகத்துப் பின்னர் “செயலாளர் நாயகம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகத்தினால் தமக்கென நிருவகிக்கப்பட்ட சத்தியம் அல்லது உறுதியுரையின் பயனைக் கொண்டு கடமையை புரிதல் வேண்டும்.

4. உறுப்பினர் ஒவ்வொருவரும், பாரபட்சமற்றவிதத்தில் பொதுச்சட்டம் உட்படநாட்டின் சட்டத்தினை போற்றிக்காத்தல் வேண்டுமென்பதுடன் எல்லா நேரங்களிலும் தமது வாக்காளர்கள் தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளை பிரயோகிப்பதிலும், புரிவதிலும் மற்றும் நிறைவேற்றுவதிலும் பாரபட்சமற்றவிதத்தில் செயலாற்றுதலும் வேண்டும்.

5. உறுப்பினர் ஒவ்வொருவரும் தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளை பிரயோகிப்பதில், புரிவதில் மற்றும் நிறைவேற்றுவதில் குறிப்பாக தமது வாக்காளர்களை நோக்கியும் பொதுவாக நாடு பற்றிய அக்கறையிலும் செயலாற்றுதல் வேண்டும்.

6. உறுப்பினர்கள் எல்லா சந்தர்ப்பங்களிலும் தம்மீது ஒப்படைக்கப்பட்ட பகிரங்க நம்பிக்கைக்கிணங்க செயலாற்றுதல் வேண்டும் என்பதுடன் அவர்களினால் எவையேனும் பொது வளங்களை பயன்படுத்துவது உட்பட நேர்மையுடனும் ஒருமைப்பாட்டுடன் எப்போதும் நடந்துகொள்ளுதல் வேண்டும்.

## பாகம் IV

## நடத்தைக் கோட்பாடுகள்

7. உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தமது பகிரங்க மற்றும் பாராளுமன்ற கடமைகளை நிறைவேற்றுவதில் பின்வரும் நடத்தைக்கோட்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்:-

   (அ) உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் முடிபுகளை எடுக்கும் போது எப்போதும் பொதுமக்கள் அக்கறையினை கருத்திற்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் தனக்காக, தனது குடும்ப உறுப்பினர்களுக்காக, நண்பர்களுக்காக அல்லது தன் சார்பில் வேறு எவரேனும் ஆளுக்காக ஏதேனும் நிதிசார் அல்லது வேறு பொருள்சார் நன்மையை அல்லது தனிப்பட்ட அனுகூலத்தை எதிர்பார்த்தல் ஆகாது

   (ஆ) உறுப்பினர் எவரும் தனது அலுவலக கடமைகளை நிறைவேற்றுவதில் அத்தகைய உறுப்பினரின் செல்வாக்கு செலுத்தக்கூடியதான ஏதேனும் வெளியே உள்ள தனியாள் அல்லது ஒழுங்கமைப்பிற்கு ஏதேனும் நிதிசார் அல்லது கடப்பாடுகளின்கீழ் தாமே ஏதேனும் வழியமைத்துக்கொடுத்தலாகாது.

(இ) உறுப்பினர்கள் ஏதேனும் பகிரங்க அலுவல்கள், பகிரங்க நியமனங்கள், ஒப்பந்தங்களை வழங்குதல், ஏதேனும் வெகுமதிகளுக்கென ஆட்களை விதந்துரைத்தல் அல்லது வேறேதேனும் நன்மை தொடர்பில் அவர்களது கடமைகளை நிறைவேற்றுவதில் அத்தகைய கருமங்கள் முழுமையாக திறமையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது என உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(ஈ) உறுப்பினர்கள் அவர்களால் எடுக்கப்பட்ட முடிபுகளுக்கும் பொதுமக்களுக்கு அவர்களால் செய்யப்பட்ட செயற்பாடுகளுக்கும் பதிலிறுக்க வேண்டியவராதல் வேண்டுமென்பதுடன் அவர்களது பதவிக்கு தோதான நுண்ணாய்விற்கு அல்லது ஏதேனும் பகிரங்க நுண்ணாய்விற்கு அமைந்தோராதல் வேண்டும்.

(உ) உறுப்பினர்கள் அவர்களினால் எடுக்கப்பட்ட அல்லது செய்யப்பட்ட ஏதேனும் முடிவு அல்லது செயல் தொடர்பில் இயலுமானளவு விரைவாக பொதுமக்களுக்கு வெளிப்படுத்துதல் வேண்டும். என்பதுடன் அத்தகைய முடிபுகளுக்கான காரணங்களை குறித்தளித்தலும் வேண்டும் அத்துடன் பரந்த பொதுமக்கள் அக்கறையை தெளிவாக தேவைப்படுத்தும் போது மட்டுமே தகவல்களை மட்டுப்படுத்துதல் வேண்டும்.

(ஊ) உறுப்பினர்கள் தமது பகிரங்க கடமைகள் தொடர்பில் ஏதேனும் தனிப்பட்ட அக்கறை அல்லது அக்கறைகளின் முரண்பாடு ஏதேனும் இருப்பின் அவற்றை பிரகடனம் செய்தல் வேண்டும் என்பதுடன், பொதுமக்களின் அக்கறை பாதுகாக்கப்படுகின்ற வகையில் அதனால் எழுகின்ற ஏதேனும் முரண்பாடுகளை தீர்ப்பதற்கு ஏதேனும் நடவடிக்கைகளை எடுத்தலும் வேண்டும்.

8. ஒவ்வொரு உறுப்பினரும் முன்மாதிரியான தலைமைத்துவத்தை வழங்கும் நோக்கில் 7 இல் குறித்துரைக்கப்பட்ட நடத்தைக் கோட்பாடுகளை மேம்படுத்தி போற்றிக் காத்தல் வேண்டும்.

## பாகம் V
## நடத்தை விதிகள்

9. உறுப்பினர்கள் பின்வரும் பாராளுமன்ற விதிகளுக்கிணங்க ஒழுகுதல் வேண்டும்:-

(அ) மனச்சாட்சிப்படி நடத்தல்;

(ஆ) மக்களின் மனித உரிமைகள் மற்றும் உள்ளார்ந்த கௌரவத்தை மதித்தல்;

(இ) மக்களின் நம்பிக்கை மற்றும் மதிப்பை சிறக்கும் வண்ணம் செயற்படுதல்;

(ஈ) அரசியலமைப்பின் சொற்கள் மற்றும் உள்ளார்ந்த தன்மையினால் கட்டுப்பட்டு சனநாயக அரசாங்கத்தின் எண்ணக்கருக்களுக்கு பயன்கொடுத்தலும், தத்துவவேறாக்கல், சட்ட ஆட்சி கோட்பாடுகளை போற்றிக் காத்தலும்;

(உ) அவர்கள் பொறுப்பாக இருக்கக்கூடிய நடத்தை மற்றும் கடமைகளுக்கென பதிலிறுக்கக்கூடியதாக தம்மைத் தாமே நடாத்துதல்; அத்துடன்

(ஊ) சட்டத்தின்கீழ் அவர்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள சிறப்புரிமைகளை அனுபவித்தலுடன் பொது பதவியில் தமது கடமைகளை விநயத்துடனும், கௌரவத்துடனும் உரிய கவனத்துடனும் மரியாதையுடனும் நிறைவேற்றுதல்.

10. உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் பாராளுமன்றத்தில் பயனுள்ளதும் வினைத்திறனானதுமான பணிகளுக்கு பங்களிப்பதற்கு தனித்து பொறுப்பாதல் வேண்டும்.

11. உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் பாராளுமன்ற பணியாட்டொகுதியினரின் பங்களிப்புகள், சுயாதீனம், உரிமைகள் மற்றும் பொறுப்புடைமைகள் என்பவற்றை மதித்தல் வேண்டும்.

12. உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் நிறைவேற்று அரசாங்கம் பாராளுமன்றத்துக்கு பொறுப்புடையதாக இருக்கின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கு பாராளுமன்ற சனநாயகத்தை போற்றிக்காப்பதில் பொறுப்பாதல் வேண்டும்.

13. உறுப்பினர்கள் பாராளுமன்றத்தின் மதிப்பு மற்றும் ஒருமைப்பாடு அல்லது அதன் உறுப்பினர்களின் அல்லது நாட்டின் மதிப்பு அல்லது ஒருமைப்பாட்டிற்கு சேதத்தை விளைவிக்கக்கூடிய ஏதேனும் செயற்பாட்டை பொறுப்பேற்றல் ஆகாது.

## பாகம் VI

## உறுப்பினர்களின் அக்கறைகளின் பதிவேடு மற்றும் அத்தகைய அக்கறைகளின் வெளியிடுகையும் வெளியீடும்

14. (இதனகத்துப்பின்னர் "பதிவேடு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ''உறுப்பினர்களின் அக்கறைகளின் பதிவேடு" என அழைக்கப்படும் பதிவேடுகள் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகளின் மீதான குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் செயலாளர் நாயகத்தினால் பாதுகாத்துப் பேணப்படுதல் வேண்டும். அது செயலாளர் நாயகத்துக்கு அது சார்பில் விடுவிக்கப்படும் வேண்டுகோளின்மீது எவரேனும் உறுப்பினரின் பரிசீலனைக்கென கிடைக்கக்கூடியதாய் இருத்தல் வேண்டும்.

15. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச்சட்டத்தின் ஏற்பாடுகள் பதிவேட்டில் அடங்கியுள்ள ஏதேனும் தகவலின் வெளியிடுதலுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

16. உறுப்பினர்கள், உறுப்பினர்களின் பகிரங்க நம்பிக்கையை அதிகரிக்கும் நோக்கில் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களின் தகவல் உட்பட தமது வியாபாரத் தொடர்புகள் மற்றும் நிதிசார் அக்கறைகள் தொடர்பில் தகவல்களை வெளியிடுதல் வேண்டும்.

17. உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் அத்தகைய நோக்கத்துக்கென பாராளுமன்றத்தில் வைத்திருக்கப்படும் உறுப்பினர்களின் நிதிசார் அக்கறைகள் மீதான பதிவேட்டின் ஏதேனும் அக்கறையான பதிவு தொடர்பில் சபையின் தேவைப்பாடுகளை மனச்சாட்சிப்படி நிறைவேற்றுதல் வேண்டும். இப்பந்தியின் நோக்கங்களுக்கென ஒவ்வொரு உறுப்பினரும் பொதுத்தேர்தல் ஒன்றை உடனடுத்து காணி மற்றும் ஆதனம், பங்குவைத்திருக்கை மற்றும் கொடைகள் தொடர்பான சொத்துக்கள் போன்ற அத்தகைய உறுப்பினர்களின் கடமைகள் பொறுப்புடைமைகள் மற்றும் தனிப்பட்ட அக்கறைகள் என்பவற்றுக்கிடையே ஊக்கப்படுத்துகின்ற நடத்தைகளின் நோக்கை உயர்த்தக்கூடியதென நியாயமான ஆள் கருதுகின்ற எல்லா இயைபான அக்கறைகளையும் பாராளுமன்றத்துக்கு வெளிப்படுத்துதல் வேண்டும். இப்பந்தியின் ஏற்பாடுகள் அத்தகைய உறுப்பினர்களால் பெறப்பட்ட அல்லது நன்கொடையளிக்கப்பட்ட ஏதேனும் பொருட்களிற்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

18. உறுப்பினர் எவரும் எந்தப் பகிரங்க கொள்கையின் பண ரீதியான அக்கறையை கொண்டுள்ளாரோ அந்தப் பகிரங்க கொள்கை தவிர்ந்த விடயம் ஒன்று தொடர்பில் கேள்வி ஒன்றின் மீது பிரிவில் வாக்களித்தல் ஆகாது.

19. எவரேனும் உறுப்பினர் பாராளுமன்றத்தினால் அல்லது அதன் ஏதேனும் குழுவினால் கருத்திற்கெடுக்கப்படும் ஏதேனும் விடயம் தொடர்பில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏதேனும் தனிப்பட்ட அல்லது பண ரீதியான அக்கறையை கொண்டுள்ளவிடத்து அத்தகைய உறுப்பினர் பதிவேட்டில் அத்தகைய அக்கறை பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற நிகழ்வு எவ்வாறிருப்பினும் அத்தகைய அக்கறையின் தன்மையை வெளிப்படுத்துதல் வேண்டும். அத்துடன் அவர் இப்பந்தியினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக அத்தகைய பிரகடனத்தை செய்தாலொழிய சபையில் அல்லது குழுவில் இடம்பெறும் ஏதேனும் விவாதத்தில் பங்குபற்றுதல் ஆகாது.

20. உறுப்பினர் எவரும் தமது பாராளுமன்ற கடமைநெறியின்போது இரகசியமாக அத்தகைய உறுப்பினர் பெற்றுக் கொண்ட ஏதேனும் தகவலை தவறாக உபயோகித்தல் ஆகாது. அத்தகைய தகவல் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரால் தமது பாராளுமன்ற கடமையை புரிகையில் மட்டுமே பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் நிதிசார் அல்லது தனிப்பட்ட நன்மையின் நோக்கத்திற்கு பயன்படுத்துதல் ஆகாது.

21. பாராளுமன்றமானது 17ஆம் பந்தியின் கீழ் எவரேனும் உறுப்பினரால் அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட தகவல் அத்துடன் ஒவ்வொரு உறுப்பினராலும் பயன்படுத்தப்பட்ட பொதுநிதியச் செலவுகளின் தொகைகள் அத்துடன் எந்த நோக்கத்திற்கென அத்தகைய நிதிகள் பயன்படுத்தப்பட்டுள்ளனவோ அந்த நோக்கத்தை இயலுமானவரை செயற்பாட்டுக்கு வரும் வகையில் வெளியிடுதல் வேண்டும். இவை பாராளுமன்ற இணையதளம் போன்ற கிடைக்கக்கூடிய ஆகக்கூடியதாக பெறக்கூடியவழியில் பாராளுமன்றத்தினால் வெளியிடப்படுதல் வேண்டும்.

22. இப்பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகள் வாழ்க்கைத் துணை மற்றும் சம்பந்தப்பட்ட உறுப்பினரின் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களிற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.
இப்பந்தியின் நோக்கத்திற்காக “நெருங்கிய குடும்ப உறுப்பினர்” என்பது தந்தை, தாய், வாழ்க்கைத் துணை, மகள் அல்லது மகன் எனப் பொருள்படும்.

## பாகம் VII
## உறுப்பினர்கள் பகிரங்க சொத்துக்களை பயன்படுத்துதலும் ஊக்குவித்தல்களும்

23. உறுப்பினர்கள் சட்டத்தினால் அனுமதிக்கப்பட்டவாறாக பகிரங்க அக்கறைகளில் மட்டுமே ஏதேனும் பொது நிதி, ஆதனம் அல்லது வசதிகளை பயன்படுத்துதல் வேண்டும். அத்தகைய பொது நிதி, ஆதனம் அல்லது வசதி சட்டத்தினால் விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்டாலொழிய கட்சி அரசியல் நோக்கங்களில் பயன்படுத்தப்படுதலாகாது.

24. உறுப்பினர் ஒவ்வொருவரும் பொதுப்பணத்திலிருந்து அவர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் செலவீனங்கள், வசதிகள் மற்றும் சேவைகள் அத்தகைய கருமங்கள் மீது இடப்படும் விதிகளுக்கிணங்க உள்ளனவென உறுதிப்படுத்துவதற்கு தனிப்பட்ட ரீதியில் பொறுப்பாக இருக்கின்றனர். உறுப்பினர்கள் தங்களால் பயன்படுத்தப்படும் ஏதேனும் பகிரங்க வளங்கள் எப்போதும் தமது பாராளுமன்ற கடமைக்கு உதவிபுரிவதாகவுள்ளனவென உறுதிப்படுத்துதல் வேண்டும் அத்துடன் அது அத்தகைய உறுப்பினர்களின் அல்லது வேறெவரேனும் அல்லது ஏதேனும் அரசியல் ஒழுங்கமைப்பின்மீது ஏதேனும் முறையற்ற தனிப்பட்ட அல்லது நிதிசார் நன்மைகளை அளித்தல் ஆகாது.

25. உறுப்பினர் எவரும் பாராளுமன்றத்திற்கு அல்லது அதனது ஏதேனும் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஏதேனும் சட்ட மூலம், பிரேரணை அல்லது வேறு கருமத்திற்கு மேம்படுத்துதல் அல்லது எதிர்த்தல் தொடர்பில் ஏதேனும் கட்டணம், நட்டஈடு அல்லது வெகுமதி உட்பட உறுப்பினர் ஒருவராக அக்கறைகளின் முரண்பாடு அல்லது அவரது நடத்தையில் செல்வாக்கு செலுத்துவதற்கு காராணமாக இருக்கக்கூடிய ஊக்கப்படுத்தலின் ஏதேனும் வடிவத்தை ஏற்றுக்கொள்ளுதல் ஆகாது.

26. உறுப்பினர் எவரும் ஏதேனும் செலுத்தப்பட்ட ஆதரவுநாடுகை, செலுத்தப்பட்ட பாராளுமன்ற மதியுரை அல்லது செலுத்தப்பட்ட பாராளுமன்ற ஆலோசனையில் ஈடுபடுதல் ஆகாது.

27. உறுப்பினர் எவரும் எதிர்கால தொழிலை நாடுவதற்கு அல்லது பாதுகாப்பதற்கு, உறுப்பினர் ஒருவராக இருப்பதை இல்லாதொழிப்பதன் மேல் செலுத்தப்பட்ட ஆதரவுநாடுகை, ஆலோசனை வேலை அல்லது வேறு ஊதியம் அல்லது நன்மை என்பவற்றை அவரது நிலையில் பயன்படுத்துவது ஆகாது.

28. உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் சமமான அடிப்படையில் அத்துடன் ஏதேனும் தனிப்பட்ட அல்லது அரசியல் இணைப்பு அல்லது ஊக்கப்படுத்தல் அடிப்படை அல்லாமல் தமது வாக்காளர்களின் அக்கறையை பிரதிநிதித்துவப்படுத்தல் வேண்டும்.

## பாகம் VIII
## வரவு, நடத்தை மற்றும் நற்பண்பு

29. உறுப்பினர் ஒவ்வொருவரும் சபையின் ஒவ்வொரு அமர்விற்கும் அத்துடன் அத்தகைய உறுப்பினர் உறுப்பினராகவுள்ள குழுக்களின் ஒவ்வொரு கூட்டத்திற்கும், விடயத்திற்கேற்றவாறு பாராளுமன்றத்தின் அல்லது அத்தகைய குழுவின் அனுமதியுடன் தவிர வருகை தருதல் வேண்டும். உறுப்பினர் ஒவ்வொருவரும் பாராளுமன்றத்திற்கு வருகை தரும்போது முறையாக ஆடையணிதல் வேண்டும்.

30. உறுப்பினர்கள் பாராளுமன்ற விவாதத்தில் விசேடமாக அரசியல் வெளியிடுகையில் நற்பண்பையும் தோதான மொழிப்பயன்பாட்டையும் பிரயோகித்தல் வேண்டும்.

31. உறுப்பினர் எவரும் எவரேனும் ஆளை வசைபாடுதலோ தொல்லைகொடுத்தலோ அல்லது மிரட்டுதலோ ஆகாது.

32. உறுப்பினர் ஒவ்வொருவரும் கௌரவத்துடன், பண்புடன் மற்றும் பாராளுமன்றத்தின் கௌரவத்தை குறைக்காமல் தனது சக உறுப்பினர்களை, பாராளுமன்ற பணியாட்டொகுதியினரை அத்துடன் நாட்டு மக்களை மதிக்கின்ற முறையில் செயலாற்றுதல் வேண்டும்.

## பாகம் IX
## நடத்தைக் கோவையைப் போற்றிக் காத்தல்

33. நடத்தைக் கோவையின் ஏற்புடைமையானது பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளுக்கு இணங்கச் செயற்படுகின்ற இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசுப் பாராளுமன்றத்துக்கான விடயமொன்றாக இருத்தல் வேண்டும்.

34. இந்நடத்தைக் கோவையின் ஏற்பாடுகளுக்கு உறுப்பினர் ஒருவரின் பற்றுறுதி தொடர்புபட்ட ஏதேனும் விடயத்தை ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் மீதான குழு புலனாய்வு செய்யலாம். சபையினால் அல்லது அதன் அதிகாரத்தின்கீழ் நடத்தப்படக்கூடியவாறான ஏதேனும் புலனாய்வுக்கு உறுப்பினர் ஒவ்வொருவரும் எல்லா சந்தர்ப்பங்களிலும் ஒத்துழைத்தல் வேண்டும். இந்த நடத்தைக் கோவையின் சார்த்தப்பட்ட மீறுகையொன்றினை சபையினால் கருத்திற்கெடுக்கப்படுவதை செல்வாக்கு செலுத்துவதற்கு கணிக்கப்படும் அல்லது கருதப்படும் முறையொன்றில் எந்தவோர் உறுப்பினரும் குழுவின் உறுப்பினர் ஒருவரிடம் ஆதரவை நாடுதல் ஆகாது.

35. ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் மீதான குழு அதனது கடமைகளைச் செயலாற்றுகை செய்கையில் நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம், ஆவணங்களைக் கோரலாம் மற்றும் சாட்சிகளை அழைத்து விசாரிக்கலாம்.

36. ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் மீதான குழுவினால் ஆக்கப்பட்ட பரிந்துரைகளை பாராளுமன்றம் கருத்திற்கொள்ளல் வேண்டுமென்பதோடு தேவையெனக்கருதும் பட்சத்தில் ஏதேனும் உறுப்பினர் மீது தண்டனைகளை விதிக்கலாம்.

## பாகம் X
## முறைப்பாடுகள், புலனாய்வுகள், வலுவுக்கிடுகை மற்றும் தண்டனைகள்.

37. உறுப்பினரொருவர் அல்லது எவரேனுமோராள் பின்வருவன தொடர்பில் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் மீதான குழுவுக்கு ஏதேனும் முறைப்பாட்டை மேற்கொள்ளலாம்.

(அ) உறுப்பினரொருவரால் புரியப்பட்டதாகக் கூறப்படும் ஒழுக்கமுரணான நடத்தை;

(ஆ) எவரேனும் உறுப்பினரால் நடத்தைக் கோவையின் ஏதேனும் பிரிவு மீறப்படுதல்; அத்துடன்

(இ) பந்தி 17இன் கீழ் தனது அக்கறைகள் தொடர்பில் உறுப்பினரொருவரால் வழங்கப்பட்ட தவறான அல்லது பொய்யான ஒரு தகவல்.

38. ஆளொருவரால் முறைப்பாடொன்று செய்யப்படுகின்றவிடத்து, உறுப்பினரொருவரால் அது மேலொப்பமிடப்பட்டு ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் மீதான குழுவுக்கு அவரால் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

39. பந்தி 37இன் கீழான ஏதேனும் முறைப்பாடு எழுத்துமூலம் மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென்பதோடு, பின்பு பொருத்தமான நேரத்தில் அது குறித்துக் கேள்வியெழுப்புவதற்கு அத்தகைய உறுப்பினரை அனுமதிக்கக்கூடிய சபாநாயகருக்கு அது முகவரியிடப்பட்டிருத்தலும் வேண்டும். பரிசோதனை செய்தல், புலனாய்வு செய்தல் மற்றும் அறிக்கையிடல் ஆகியவற்றுக்கென பாராளுமன்றத்தினால் செயல்முறைப்படுத்தி அனுமதிக்கப்பட்ட தீர்மானமொன்றின்மேல் அத்தகைய பிரேரணையை சபாநாயகர் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமை மீதான குழுவுக்கு ஆற்றுப்படுத்தல் வேண்டும்.

40. முறைப்பாடானது அடையாளத்தைப் பிரகடனப்படுத்த வேண்டுமென்பதோடு குற்றச்சாட்டை நிரூபிக்கும் பொருட்டு ஆவணம் அல்லது அவ்வாறல்லாத வேறேதேனும் ஆதாரப்படுத்தும் சான்றுகளைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

41. உறுப்பினரொருவரால் பந்தி 37இன் கீழான ஏதேனும் முறைப்பாடு மேற்கொள்ளப்படுகையில் அம்முறைப்பாடு பொய்யானது, அற்பமானது, அல்லது அலைக்கழிக்கத்தக்கது அல்லாததெனவும் நல்லெண்ணத்துடன் மேற்கொள்ளப்படுகின்ற ஒன்றெனவும் அவர் உறுதிப்படுத்தல் வேண்டும்.

42. எவரேனுமாளால் பந்தி 37இன் கீழான ஏதேனும் முறைப்பாடு மேற்கொள்ளப்படுகையில், அத்தகைய முறைப்பாடு பொய்யானது, அற்பமானது, அல்லது அலைக்கழிக்கத்தக்கது அல்லாததெனவும், நல்லெண்ணத்துடன் மேற்கொள்ளப்படுகின்ற ஒன்றெனவும் அவரால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். அதனைப் பயனுறச்செய்வதற்கான சத்தியக்கடதாசியொன்று முறைப்பாட்டுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

43. பந்தி 37இல் குறிப்பிடப்பட்டுள்ள எவரேனும் உறுப்பினர் அல்லது ஆள், ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் மீதான குழுவினால் அவசியமெனத் தேவைப்படுத்தப்படும் பட்சத்தில் அத்தகைய முறைப்பாடானது பொய்யானது, அற்பமானது, அல்லது அலைக்கழிக்கத்தக்கது அல்லாதவொன்றென்றும் நல்லெண்ணத்துடன் மேற்கொள்ளப்பட்டதென்றும் குழு திருப்தியுறும் வகையில் எண்பித்தல் வேண்டும்.

44. பந்தி 37இன் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு முறைப்பாடும் தோதான மொழியில் இருத்தல் வேண்டும் என்பதோடு, விடயத்துக்கேற்றவாறு அத்தகைய உறுப்பினரால் அல்லது ஆளினால் கையொப்பமிடப்பட்டிருத்தலும் வேண்டும்.

45. வெறுமனே ஆதாரமற்ற ஊடக அறிக்கையொன்றை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற ஏதேனும் முறைப்பாடு ஏற்றுக்கவனிக்கப்படுதலாகாது.

46. ஏதேனும் விடயம் விசாரணை நிலையிலுள்ளதாக இருப்பின் அத்தகைய விடயத்தை ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் மீதான குழு கவனத்திற்கு எடுத்துக்கொள்ளலாகாது. அத்தகைய விடயம் விசாரணை நிலையிலுள்ளதா அல்லது அவ்வாறற்றதா என்பது பற்றிய குழுவின் முடிபு இறுதியானதாதல் வேண்டும்.

## பாகம் XI

## விசாரணை மற்றும் தண்டனைகளுக்கான நடபடிமுறை

47. ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் மீதான குழு, அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட முறைப்பாடானது முறையான வடிவத்தில் உள்ளதென்றும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயம் அதன் நியாயாதிக்கத்திற்கு உட்பட்டதென்றும் திருப்தியுற்றால் பாராளுமன்றத்தினால் விசாரிக்கப்படுவதற்கென அத்தகைய முறைப்பாட்டை அது கையேற்கலாம்.

48. பூர்வாங்க விசாரணையின் பின்னர், அத்தகைய விசாரணையினால் முகத்தோற்றளவிலான வழக்கொன்று வெளிப்படுத்தப்படவில்லை என்ற அபிப்பிராயத்தை ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமை மீதான குழு கொண்டிருப்பின், அத்தகைய முறைப்பாடானது கைவிடப்படலாம்.

49. ஏதேனும் முறைப்பாடு பொய்யானது, அற்பமானது, அல்லது அலைக்கழிக்கத்தக்கதென்றும் தீய எண்ணத்துடன் செய்யப்பட்டதென்றும் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில், ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் மீதான குழு அத்தகைய முறைப்பாடு பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறுவதைக் கருதி அத்தகைய விடயம் குறித்து விசாரிக்கலாம்.

50. பூர்வாங்க விசாரணையின் பின்னர் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் மீதான குழு முகத்தோற்றளவிலான வழக்கொன்று உள்ளதெனக் கருதினால், அதனைப் பரிசோதனை செய்து அத்தகைய விடயத்தை பாராளுமன்றத்துக்கு அறிக்கையிடல் வேண்டும்.

51. உறுப்பினர் ஒவ்வொருவரும் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் மீதான குழுவுக்கு பந்தி 37இன் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் முறைப்பாட்டின் கீழ் அக்குழுவால் நடத்தப்படுகின்ற புலனாய்வு மற்றும் விசாரணையில் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் மீதான குழுவுக்கு ஒத்துழைத்து உதவுதல் வேண்டும்.

52. தற்போதுள்ள குற்றவியல் சட்டத்துடன் தொடர்புடைய ஏதேனும் மீறுகையைப் பயனுறச்செய்கின்ற ஏதேனும் சான்றை ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் மீதான குழு கண்டுபிடித்தால், அத்தகைய விடயத்தை விசாரணை செய்வதற்கு நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள பொலிஸ் அல்லது வேறு நிறுவனத்துக்கு அத்தகைய விடயத்தை அது உடனடியாக ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

53. அத்தகைய விடயத்தின் கீழான புலனாய்வினதும் விசாரணையினதும் பின்னர், ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் மீதான குழு அதன் கண்டுபிடிப்புக்களை அல்லது பரிந்துரைகளை அதன் விதிகளுக்கிணங்க மேலதிக நடவடிக்கைகளுக்கென சபைக்கு அறிக்கை செய்தல் வேண்டும்.

54. உறுப்பினரொருவர் ஏதேனும் ஒழுக்கமுரணான நடத்தையில் ஈடுபட்டுள்ளதாக அல்லது எவரேனும் உறுப்பினர் தொடர்பில் வேறு தவறான நடத்தை உள்ளதாக அல்லது எவரேனும் உறுப்பினர் நடத்தைக் கோவையின் ஏதேனும் ஏற்பாட்டை மீறியிருப்பதாக கண்டுபிடிக்கப்படுமிடத்து, பின்வரும் தண்டனைகளுள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றை விதிக்குமாறு ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் மீதான குழு சபைக்கு பரிந்துரைக்கலாம்:-

(அ) கண்டித்தல்;

(ஆ) எச்சரிக்கை செய்தல்;

(இ) ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமை மீதான குழுவினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான காலப்பகுதி ஒன்றிற்கு பாராளுமன்றத்தில் இருந்து இடைநிறுத்துதல், எவ்வாறாயினும், அத்தகைய காலப்பகுதி 1978ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தில் தரப்பட்டவாறான வரையறைகளை விஞ்சுதலாகாது; அத்துடன்

(ஈ) மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் பாராளுமன்றத்தினால் உயர்நீதிமன்றத்துக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட விடயமொன்று தொடர்பில் உயர்நீதிமன்றத்தினால் விதிந்துரைக்கப்படக் கூடியவாறான வேறேதேனும் தண்டணைகள்.

## பாகம் XII

## அறிக்கையைச் சமர்ப்பித்தலும் கருத்திற்கொள்தலும்

55. ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் மீதான குழுவின் அறிக்கை அக்குழுவின் தவிசாளரால் அல்லது அவர் சமூகமளிக்காதவிடத்து குழுவின் எவரேனுமோர் உறுப்பினரால் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு அது பாராளுமன்றத்தினால் கருத்திற்கொள்ளப்படலாம்.

56. அறிக்கை கருத்திற்கொள்ளப்பட்டதன் பின்னரான பிரேரணை நிறைவேற்றப்பட்டதன் பிற்பாடு, விடயத்துக்கேற்றவாறு, ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் மீதான குழுவின் தவிசாளர் அல்லது எவரேனுமோர் உறுப்பினர் அறிக்கையில் குறித்துரைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளுடன் சபை இணங்குகின்றது அல்லது இணங்கவில்லை அல்லது திருத்தங்களுடன் இணங்குகின்றதெனப் பிரேரணை கொண்டுவரலாம்.

## பாகம் XIII

## நடத்தைக் கோவையின் உருவாக்கமும் இற்றைப்படுத்தலும்

57. நடத்தைக் கோவை பொருத்தப்பாடுடையதாக அமைவதையும், தேவைக்கேற்றவாறு, காலத்துக்காலம் மீளாய்வு மற்றும் மீள்பரிசீலனை செய்யப்படுவதையும், இற்றைப்படுத்தப் படுவதையும் மற்றும் உறுப்பினர்களுக்கு பரிச்சயமாக உள்ளதையும் சபை உறுதிப்படுத்தல் வேண்டும்.

58. இந்நடத்தைக் கோவையானது பாராளுமன்றத்தின் முடிபின் மீது நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

*****************